விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -21 | 06-08-2003 | புதன்கிழமை | ஓசை 169

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்
Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, (சி-8437) கிளிநொச்சி.

# எமது மண்ணின் தொல்லியலாதாரங்களை பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும்

## தேசியத்தலைவர் கரிசனை கொண்டுள்ள முக்கிய விடயம் என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

**எமது மண் எம்முடையதுதான் என்பதை நிரூபிக்கும் வரலாற்றுச் சான்றுகளை, தொல்லியல் ஆதாரங்களைக் காப்பதும் அழிவுக் குள்ளாகிக் கொண்டிருப்பவற்றை அழிவிலிருந்து பாதுகாப்பதும் இன்று மிகவும் அவசியமாகும். இதன் முக்கியத்துவம் பற்றி எமது தலைவர் மிகவும் வலியுறுத்தியுள்ளார் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்றுக் காலை தூயவன் அரசறிவியல் கல்லூரியில் அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தைத் தொடக்கிவைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,எமது வரலாற்றுச் சான்றுகள் பண்பாட்டு ஆதாரங்கள் அரும்பொருட்கள் போன்றவற்றை பாதுகாப்பதன் தேவை பற்றிய விழிப்புணர்வை எமது மக்களிடையே பலமாக உருவாக்க வேண்டும். மக்களிடத்தில் விழிப்புணர்வு ஊட்டப்பெறவில்லை என்றால் எமது அரும்பெரும் பொருட்களை வரலாற்று ஆதாரங்களை, ஆவணங்களைக்காக்கும் பலமான மக்கள் சக்தி செயலற்றதாக ஆகுவதோடு அவை அழிந்து போவதற்கும் காரணமாகிவிடும். தென் தமிழீழத்தில் பல வரலாற்று அடையாளங்கள் உண்டு. எமது போராளிகள் தளம் ஒன்று அமைக்க கிணறு ஒன்றை வெட்டியபோது அதனுள் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது எமது முன்னோரின் இருப்பினை

(08ஆம் பக்கம் பார்க்க)

## தலையில் காயத்துடன் யாழ்.இல் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு யாழ். கஸ்தூரியார் வீதியில் தலையில் காயத்துடனான சடலம் ஒன்றை சிறிலங்காப் பொலிசார் மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர் .நகரிலுள்ள நகைக்கடை ஒன்றில் பணிபுரியும் மட்டக்களப்பைச் சேர்ந்த 38 வயதான சின்னத்தம்பி தன்னப்பிள்ளை என்ற குடும்பஸ்தரின் சடலமென அடையாளங்காணப் பட்டுள்ளது. இறந்தவருடன் தங்கியிருந்த இருவரைப் பொலீசார் விசாரணைக்குட் படுத்தியுள்ளனர்.

## உந்துருளி மதிலுடன் மோதி ஓட்டி வந்தவர் பலி!

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் வேகமாக வந்த உந்துருளி கட்டுப்பாட்டை மீறி மதிலுடன் மோதியதில் உந்துருளியை ஓட்டி வந்தவர் தலையில் படுகாயமடைந்து மரணமடைந்துள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த 26 வயதான மகேஸ்வரன் என்பவரே மரணமானவராவார். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## புகையிரதத் திணைக்கள ஊழியர் நேற்றுமுதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

புகையிரதத்திணைக்கள ஊழியர்கள் ஊதிய உயர்வுகோரியும் அதிகார சபையாக மாற்றுவதை எதிர்த்தும் நேற்றுமுதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். ஐந்து தொழிற்சங்கத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலைநிறுத்தத்தினால் நாட்டின் பலபாகங்களுக்குமான உணவுப் பொருள், எரிபொருள் விநியோகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலை நிறுத்தம் குறித்து அமைச்சர் திலக் மாரப்பன கூறுகையில்,புகையிரதத் திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்படுவது அரசின் தனியார் மயமாக்கல் கொள்கையின் பாற்பட்டதல்ல. புகையிர தத்திணைக்களம் சிறந்த சேவையை ஆற்ற வேண்டும் என்பதற்காகவே அதனை அதிகாரசபையாக மாற்ற முடிவு செய்துள்ளோம் என்றார்.

## யாழ்.இல் கண்ணிவெடியகற்றல் தாமதத்திற்கு இராணுவத்தின் தவறான வரைபடமே காரணம்

### கண்ணிவெடிகள் செயற்பாட்டுக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை -நெடுங்குளம் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணி காலதாமதமாவதற்கு இராணுவத்தினர் தவறான வரைபடங்களைத் தந்ததே காரணம் என யாழ். மாவட்ட கண்ணிவெடிகள் செயற்பாட் டுக்குழு தெரிவித்துள்ளது.

கண்ணிவெடிகள் இருப்பதாகக் கூறி இராணுவத்தினரால் வழங்கப்பட்ட வரைபடத்தின்படி "கலோறஸ்" அமைப்பினர் நடவடிக்கையினை மேற்கொண்டபோதும் அதில் குறிப்பிட்ட பகுதியில் கண்ணிவெடிகள் இருக்கவில்லை. இதனால் தேடும் பணிமூலமே கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து அழிக்க வேண்டியுள்ளது. இதனால் குறித்த கடந்த 30 ஆம் திகதிக்கு முன்னர் நெடுங்குளத்தில் நீதிமன்றினால் அறிவிக்கப்பட்ட மூன்று பிரதேசங்களிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றும் பணி தாமதடைகிறது என செயற்பாட்டுக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்திற்கு நெடுங்குளம் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை "கலோறஸ்" அமைப்பினர் மேற்கொண்டிருந்தபோது மூன்று பிரதேசங் களில் மனித புதைகுழிகண்டுபிடிக் கப்பட்டிருந்தது. இதனையடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த யாழ்மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆடிமாதம் 30 ஆம் திகதிக்கு முன் அப்பகுதியிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைக்கு உதவுமாறு உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

## -கொழும்பு மகசின் சிறைச்சாலையில்- இரு தமிழ் இளைஞர்கள் மீது பொலிசார் கொடூரத் தாக்கு

கொழும்பு மகசின் சிறையிலுள்ள இரண்டு தமிழ் இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரினால் தாக்கப்பட்டு சித்தரவதைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கல்கிசை நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது.வைரமுத்து நித்தியானந்தன், மகாலிங்கம் சிறிதரன் ஆகிய இருவருமே பொலிசாரினால் தாக்கப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வரும் 18ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி பயங்கர வாதத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

## தமிழர் புனர் வாழ்வுக்கழக செயற்பாடுகள்பற்றி ஐப்பானிய அ.சா.நி.பிரதிநிதிகளுக்கு விளக்கம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்துக்கு சென்று அதன் செயற்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளனர்.

நேற்று மாலை 3.00 மணியளவில் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்துக்குச் சென்ற மேற்படி குழுவினர் மேற்படி நிறுவன செயற்திறன் தொடர்பாகவும் அதன் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளது என்பது பற்றியும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எத்தகைய வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் முன்னெடுக்கிறது என்பது பற்றியும் விரிவாகக் கேட்டறிந்துள்ளனர். இச்சந்திப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இனியவன், திட்டப்பணிப்பா

(08ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்கு நீண்ட காலத்திற்குப் பயன்தரும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்

### ஐப்பானிய அ.சா.நிறுவனங்களிடம் தங்கன் எடுத்துரைப்பு

தற்போதைய காலக்கட்டத்தில் உதவி வழங்கும் நிறுவனங்கள் மக்க ளுக்கு நீண்ட காலத்திற்கு பயன் தரக்கூடிய வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது தலைமைப்பீடத்தில் விருப்பம் என அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார்.

நேற்று அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். எமது பிரதேசத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலான போரினால் அடிக்கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. எனவே எமது பிரதேசத்தை ஆரம்பத்திலிருந்தே கட்டியெழுப்ப வேண்டும். பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீதிகள் மக்களின் வாழ் விடங்கள் போன்றவை அழிக்கப்பட்டுள்ளன. போர்க்காலத்தில் எமது பிரதேசத்தில் இயங்கிய ஐ.நா அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் குறுகியகால வேலைத் திட்டங்களையே மேற்கொண்டு வந்துள்ளன. தற்போதைய காலக்கட்டத்தில் பணியாற்ற வந்திருக்கும் ஜப்பானிய உதவி நிறுவனங்களான பி.ஏ.ஜே, ஏ.எம்.டி.ஏ போன்ற நிறுவனங்கள் மக்களுக்கான நீண்டகாலத்திற்குப் பயன்தரத்தக்க வேலைத்திட்டங்களை மேற்கொள்வதையே எமது தலைமைப்பீடம் எதிர்பார்க்கிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)



# வவுனியாவில் பல இடங்களிலும் இராணுவ நிலைகள் புனரமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் பல இடங்களிலும் இராணுவ நிலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா செட்டிகுளம் புகையிரத நிலையத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு வெளியேறுவது என அறிவித்திருந்தும் அந்த முகாம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதேபோன்று வவுனியா உலுக்குளம், தாண்டிக்குளம் ஆகிய இடங்களிலும் மக்கள் குடியிருப்புக்களின் மத்தியில் உள்ள இராணுவநிலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ள நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. (பா)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் - முல்லைத்தீவு

## அறிவித்தல்

வழ.இல: 278
தன்மை:
மணநீக்கம்

ஆழ்வாப்பிள்ளை
தனராசா
வட்டுவாகல்,
முல்லைத்தீவு.
*வழக்காளி.*

எதிர்:
தனராசா சாந்தநாயகி,
07ம் வட்டாரம், சிவன் கோவிலடி,
புதுக்குடியிருப்பு.
*எதிராளி.*

### இடைக்காலத்தீர்வை

2003ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் திகதி தமிழீழ மாவட்ட மன்றின் நீதியாளர் திரு.சி.மணியரசன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சட்டவாளரும் சமூகமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தும் எதிராளியோ உரித்துடையோரோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையினால் ஒருமுகமாக விளங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது.

இதன்படி வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1995ம் ஆண்டு தை மாதம் 19ந் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை ரத்துச் செய்து வழக்காளியும் எதிராளியும் திருமணத்திற்கு முன்னிருந்த நிலையை அடைவார்கள் என்றும் வழக்காளி தமது உரிமைக் கோரிக்கையின் 3ம் பந்தியில் கோரிய நிவாரணமான வழக்காளியால் குறிப்பிடப்பட்ட தேடிய தேட்டச் சொத்தின் அரைவாசியுடன் மன்று இடைக் காலத் தீர்ப்பு வழங்கப்பட்டதன்படி தீர்வையாகப் பதியப்படுகின்றது.

இவ்விடைக்காலத் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்குள் எதிராளியோ உரித்துடையோரோ மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளவும். தவறும்பட்சத்தில் குறித்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

தமிழீழ மாவட்ட
நீதியாளர்,
முல்லைத்தீவு.

வரைவு-துஜிதா
வழக்காளி-சட்டவாளர் (3473)

## கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகர யோகர் சுவாமி திருவடிநிலைய நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநகர் யோகர் சுவாமிகள் திருவடிநிலைய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படிக் கூட்டத்தில் அவசிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பெறவுள்ளதால் சகலநிர்வாக சபை அங்கத்தவர்களையும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் நிலைய செயலர் டாக்டர்.ச.முருகானந்தன வேண்டியுள்ளார். (சோ)

****************************

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறுமென பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார். (19)

## விண்ணப்பிக்கலாம்

(அலுவலக செய்தியாளர்)

இக்ராட் எம்9 நீர்வழங்கல் நிர்மாணவேலைக்கு பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் கிளி. மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நீர்வழங்கல் சம்பந்தமாக கேள்வி அறிவித்தல்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி 14ஆம திகதி எனவும் கேள்வி அறிவித்தல்களை கிளி.மாவட்ட அரச செயலகத்தில் பார்வையிடலாமெனவும் கிளி.அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.(சோ)

# மன்னார் மாவீரர் துயிலுமில்லத்தில் மாணவர்கள் சிரமதானப்பணி

மாவீரர்களின் கல்லறைகளை தூய்மைப்படுத்தும் முகமாக நேற்று மன்னாரில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிரமதானம் மன்னார் மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மடுவலயப் பாடசாலை மாணவர்களைக் கொண்டு மாலை 3.00 மணியிலிருந்து 5.30 மணிவரை நடைபெற்றது. இதில் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயமும் பங்குபற்றின. இதில் பாடசாலை மாணவர்கள் 200க்கும் மேற்பட்டோர் பங்குபற்றியதுடன், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அப்பிரதேச போராளிகளும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## 7ஆம் ஆண்டு நினைவாக

| மலராக | | விதையாக |
|---|---|---|
| 1978 - 02 - 22 |  | 1996 - 08 - 06 |

### வீரவேங்கை நிருபாலினி/நிருபா


### தர்மராசா வளர்மதி

பாவற்கொடிச்சேனை, மட்டக்களப்பு.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சி சத்ஜெய நடவடிக்கையில் எமது தங்கையுடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும், இதுவரை காலமும் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தகவல்:-**
அண்ணா-நிருபன் (போராளி) குடும்பம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
அத்தான்-ராயூ (போராளி) குடும்பம்,
உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு.
(3609)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



லெப். கேணல் நிர்மலன்
(சிவானந்தன் நிர்மலராஜ்)

**தாயின் மடியில்** 26 - 05 - 1960

**தாயக மண்ணில்** 08 - 07 - 2003

08-07-2003 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த நிர்மலனின் துயரச் செய்தியைக் கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 07-08-2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

முள்ளைவீதி, முரசுமோட்டை.

# அமைதிப்படையின் அணி லைபீரியா சென்றது;

# மக்கள் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பு!

## - கடற்பகுதிக்குள் அமெரிக்க போர்க்கப்பல்கள்

**உள்நாட்டுப் போரால் உருக்குலைந்துள்ள லைபீரிய நாட்டிற்கு அமைதி காக்கும் படையினரின் முதல் குழு நேற்று போய்ச் சேர்ந்துள்ளது. அமைதிப்படையினரை லைபீரிய மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.**

மேற்காபிரிக்க நாடான லைபீரியாவில் சனாதிபதி சார்லஸ் டெய்லரை எதிர்த்து வெடித்துள்ள கலவரத்தில் இதுவரை



2000பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். மேலும் பல ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.


அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் நெருக்குதலால் எதிர்வரும் 11ஆம்திகதிபதவி விலகப் போவதாக சனாதிபதிசார்லஸ் டெய்லர் அறிவித்துள்ளமை தெரிந்ததே என்றாலும் அங்கு சனாதிபதிக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் சண்டை நடந்து வருகின்றது.

இந்நிலையில் நைஜீரிய அமைதிகாக்கும் படையினர் 1500பேர் கொண்ட குழுவொன்று லைபீரியாவுக்குள் நேற்று போய்ச்சேர்ந்துள்ளது.

குண்டு முழக்கங்களும் மரண ஓலங்களும் நிறைந்த தலைநகர் மொன்ரோவியாவை இவர்கள் போய்ச் சேர்ந்துள்ளார்கள் இவர்களை வரவேற்ற மக்கள் தங்களுக்கு அமைதி வேண்டும் எனக் கோஷமிட்டனர்.

லைபீரியாவில் 14 வருடங்களாகத் தொடரும் படுகொலை, வன்முறைகள் என்பவற்றைக்கட்டுப்படுத்தவே அமைதிப்படையினர் போய்ச்சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில் லைபீரியாவில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அமெரிக்கப் போர்க்கப்பல்கள் அந்த நாட்டின் கடற்பரப்புக்குள் பிரவேசித்திருக்கின்றன. ஆனால் தமது தரைப்படையினரை லைபீரியாவுக்குள் அனுப்புவதா? என்பதை அமெரிக்கா இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று தெரிகிறது.



பாக்தாத்தில் அமெரிக்கப் படைகளுக்காக வைக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்கி எரியும் பொதுமகனின் கார் ஒன்றை அணைக்கும் அமெரிக்கப்படைவீரர்.

## அராபியக் கடலில் படகு விபத்து
### -பலரைக் காணவில்லை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மீனவர்களை ஏற்றிச சென்ற வள்ளமொன்று மோசமான காலநிலையில் சிக்கி அராபியக் கடலில் மூழ்கியது. இந்த அனர்த்தத்தில் ஒருவர் இறந்திருப்பதாகவும் 15 பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வள்ளம் இரண்டாகப் பிழந்து கடலில் மூழ்கிவிட்டதாக இதில் தப்பிப் பிழைத்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பலஸ்தீனரை மணம் முடித்தால் குடியுரிமையளிக்க மறுப்பு
### -இஸ்ரேலில் புதிய சட்டம்

இஸ்ரேலில் புதிதாக நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றை அமெரிக்கா விமர்சித்திருக்கின்றது.

இச் சட்டத்தின் பிரகாரம் இஸ்ரேலியர்களைத் திருமணம் செய்யும் ஹாசா மற்றும் மேற்குக் கரைவாசிகளான பலஸ்தீனியர்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்படுகிறது.

இது பாரபட்சத்தைக் கடைப்பிடிக்கும் சட்டமாக அமைந்திருக்கிறது என அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். இருந்தாலும் சட்டத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இப்போது எதுவும் கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

## நேபாளப் பிரதமரின் அழைப்பு

(காத்மண்டு)

மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான புதிய சுற்றுப் பேச்சுவார்த்தையில் பங்கேற்குமாறு நேபாளப் பிரதமர் எதிர்க் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அரசியல் யாப்பு ரீதியான மொழியாட்சியை கவிழ்த்து தன்னாட்சி அரசை தாபிப்பதற்குப் போராடும் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் கடந்த வாரம் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க இணங்கியிருந்தார்கள்.

## கராச்சி துறைமுகமருகே கப்பலில் எண்ணெய்க்கசிவு
### -சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு


(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தில் எண்ணெய் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட கசிவால் அக்கடற்கரைப் பகுதியில் சுற்றுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் இதை அகற்றும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மால்டா நாட்டிலிருந்து 67000 மெட்ரிக் தொன் கச்சாய் எண்ணெயை ஏற்றிய கப்பல் கராச்சி துறைமுகத்தை வந்தடைய சில நிமிடங்களே இருந்த நிலையில் திடீரெனக் கரை தட்டியது. இதனால் கப்பலிலிருந்து பெருமளவு கச்சாய் எண்ணெய் கசியத் தொடங்கியதால், அந்தக் கடற்கரைப் பகுதி முழுவதும் எண்ணெய்ப்படலமாகக் காட்சியளித்து வருகின்றது.

எண்ணெய் படலத்தை அகற்றப் 10 நாட்கள் ஆகும் என அதிகாரிகள் கூறியுள்ள போதிலும், அங்கு பருவ மழை பெய்து வருவதால் மீட்புப் பணிகள் தாமதமடைய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.



**காட்டுத்தீ பரவிபதைத் தொடர்ந்து அமெரிக்க வனவளபாது காப்புப் பிரிவைச் சேர்ந்த படையினர் C-5 விமானத்திலிருந்து பரசூட் மூலம் ஜோர்ஜியா விமான நிலையத்தில் தரை யிறங்குகின்றனர்.**

## கொலின் பவல் மறுப்பு



(வாஷிங்டன்)

தாமும் துணையமைச்சர் றிச்சட் ஆர்மிரேச்சும் 2005ஆம் ஆண்டின் முற்பகுதியில் பதவி விலகப் போவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் நிராகரித்திருக்கிறார்.

இந்தச் செய்தி மிகவும் அபத்தமானது என்று அவர் தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடம் அவர் பதவி விலகவுள்ளதாக கூறியதாக வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டிருந்தது.

## வருமானத்திற்கு மேலாக சொத்துச் சேர்த்த தமிழக முதல்வர் மீதான வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

வருமானத்திற்கு அதிகமான சொத்துச் சேர்த்தல் என்பதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது தொடரப்பட்ட வழக்கை வேறு மாநிலத்தில் விசாரிக்கக் கோரி தி.மு.க. பொதுச் செயலாளர் க. அன்பழகன், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது.

இந்த மனுவில் மத்திய அரசையும் எதிர் மனுதாரராக சேர்க்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இது குறித்து அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா, உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.



அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், மத்திய அரசையும் இதில் சேர்த்தால் வழக்கு முடிய மேலும் காலதாமதம் ஆகும் என்பதால் மத்திய அரசை எதிர் மனு தாரராகச் சேர்க்கக் கூடாது என்றும் தமது பதில் மனுவில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து வழக்கின் விசாரணையை நீதிபதிகள் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளனர்.

## வானூர்தி விபத்து; ஐவர் உயிரிழப்பு!

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஜம்மு அருகே நேற்றுக் காலை உலங்குவானூர்தி விபத்தில் 05 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் 02 பேர் சௌரோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீநகரிலிருந்து அமர்நாத் கோவிலுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற உலங்குவானூர்தியே நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது.

## வீரப்பனைத் தேடி வேட்டை!

தமிழகத்தில் நீலகிரி மலைப் பகுதியில் வீரப்பனைத் தேடி அதிரடிப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் நடமாடியதாகத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்காவில் முனைப்புப் பெற்றுவரும் அரசாங்க எதிர்ப்பு போராட்டங்கள்



**சி**றிலங்காவில் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான போராட்டங்களும் தொழிற்சங்கப் போராட்டங்களும் ஒரே வேளையில் நடைபெற்று வரும் அதேவேளை இந்த வாரத்தில் அப்போராட்டங்கள் தீவிரமடையக் கூடிய சாத்தியங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

டோக்கியோ மாநாட்டில் வாக்குறுதியளிக்கப்பட்ட உதவி மற்றும் கடன் தொகைகளைப் பெற்று ஆட்சியை உறுதிப் படுத்திக் கொள்ளத் துடிக்கும் ஐக்கியதேசிய முன்னணிக்கும், 2004ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியைக் குறிப்பாக வைத்து அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடத் துடிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி போன்றவற்றுக்கும் இடையேயான பலப்பரீட்சை எதிர்வரும் மாதங்களை போராட்ட மாதங்களாகத் தீவிரப்படுத்தும் சாத்தியங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு விட்டுவிட்டு நடைபெற்று வரும் அத்தியாவசிய சேவையினராகிய மருத்து வர்கள் உதவி மருத்துவர்கள் போராட்டம் தற்போதைக்கு சமாளிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தொடர்ந்து மருத்துவ சிற்றூழியர்கள் நடத்திய போராட்டம் இராணுவத்தினரை இச்சேவைக்குப் பயன் படுத்தியதன் மூலமும் சில உடன்பாடுகள் மூலமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது சில தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளக் கூடும் என்பதைப் புலப்படுத்துகின்றது.

இருந்த போதும் இந்தப் போராட்டத்தை முறியடிக்க

**வேலவன்**

இராணுவத்தைப் பயன்படுத்தியமை தொழிலாளர் விரோத நடவடிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். முப்படைகளின் தளபதியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருக்கையில் அரசாங்கத் தின் இந்த நடவடிக்கை தொடர்ந்து எவ்வளவு தூரம் நடை முறைப்படுத்த முடியும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

புகையிரதத் திணைக்களத்தை அரசாங்கம் அதிகார சபையாக மாற்றியமைக்கு எதிராகப் புகையிரத ஊழியர்கள் போராட்டங்களை நடத்தக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. சேவை நிறுத்தப் போராட்டம் சில காரணங்களுக்காகத் தள்ளிப் போடப்பட்டிருக்கின்றபோதும், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை புகையிரத சேவையைத் தனியார் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் முதற்கட்டச் செயற்பாடென எதிர்க்கட்சிகள் கொம்பு சீவிவிடுகின்றன. ஒருபடி மேலே போய் சிஹல உறுமய புகையிரத சேவையை அரசாங்கம் புலிகளுக்கு வழங்கப் போவதாகப் பிதற்றிவருகின்றது.

இதேவேளை மருத்துவத் தாதியரும் சில கோரிக்கைகளை முன்வைத்துத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அறிவித்து வருகின்றனர். இந்தப் போராட்டமும் கடந்த ஆட்சிக் காலத்திலும் இடையிடையே இடம்பெற்று வந்தது.

கடந்த வாரப் பிற்பகுதியில் கல்வி அமைச்சின் முன் ஆசிரிய தொழிற்சங்கமொன்று சில கோரிக்கைகளை முன் வைத்து மறியல் போராட்டத்தை நடத்தியது. ஊர்வலமொன் றைக் கல்வி அமைச்சு வளாகத்தை நோக்கி நடத்த முயன்ற வேளை இந்த ஊர்வலத்தின் மீது கண்ணீர்ப் புகைப்

## ரணில் அரசு என்ன செய்யப்போகிறது?



பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வேளை போராட்டம் நடத்தி யோரில் பலர் காயமடைந்திருக்கின்றனர்.

இதேவேளை, அரசாங்க ஊழியர்கள் ஒட்டுமொத்தமாகச் சம்பள உயர்வு கோரி வருகின்றனர். இக் கோரிக்கை பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்திலேயே இருந்து வருகின்ற போதும் அரச ஊழியர்களுக்கு 50 சதவீத சம்பள உயர்வு வழங்க வேண்டுமெனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக்கு உத்தரவிடுவதன் மூலம் குழப்ப நிலையை ஒருவாக்க முயல்கிறார். டோக்கியோவில் கிடைத்த நிதி உதவியை அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப் பயன்படுத்த வேண்டும் என பொ.ஐ.மு.வினர் வலி யுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை டோக்கியோவில் வாக்குறுதியளிக்கப்பட்ட நிதி உதவி அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டுமாயின் முதல் நடவடிக்கையாக சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படவேண்டும். அதற்கு இடைக்கால நிர்வாக சபை யொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் வெளிப்படையான ஒரு விடயமாகும்.

இதற்கான திட்ட வரைபொன்றை அரசாங்கம் சமர்ப்பித் திருக்கிறது. இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளாவிடினும் புலிகள் அது குறித்துப் பரிசீலித்து வருகையில் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான போராட்டங்கள் இவ்வாரம் தென் பகுதியில் தீவிரமடைக் கூடிய சாத்தியங்கள் தெரிகின்றன.

பொதுசன ஐக்கிய முன்னணியையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் பொறுத்தவரை இரு வேறுபட்ட திட்ட வரைவுகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளமை பெரும் வரப் பிரசாதமாக அமைந்துவிட்டது. அரசாங்கம் கூறுவது போல் இவ்வரைவுகளுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் இல்லை என வைத்துக் கொண்டாலும் இருக்கக் கூடிய சிறிய வேறுபாட்டைச் சுட்டிக் காட்டியே இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவுகளை ஆராயாமலே நிராகரித்துவிடக் கூடிய சந்தர்ப்பம் பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்துள்ளது.

இந்த வேறுபாட்டை அடிப்படையாக வைத்துக் கொண்டு இப்பொழுது இரகசியம் காக்கமாட்டோம் என சனாதிபதி கூறி வருகிறார். இது தனி நாட்டுக்கு வழிகோலும் என இத்தீர்வுத்திட்டத்தை ஆராயும் பொதுசன ஐக்கிய முன்னணி யின் குழுவுக்குத் தலைமை தாங்கும் கதிர்காமர் கூறுகிறார்.

இத்திட்டவரைவு குறித்து விளக்க வீடுவீடாகச் செல்லும் திட்டத்தை பொ.ஐ.மு. கொண்டிருக்கிறது. அது "விளக்க" எனக் கூறிக் கொண்டாலும் இடைக்கால நிர்வாகம் குறித்த இனவாதப் பிரச்சாரத்திற்கு அது தயாராகி விட்டது என்ப தையே இது வெளிப்படுத்துகின்றது.

இதேவேளை இடைக்கால நிர்வாக சபையொன்று அமைய விடாது தடுக்க வேண்டும் என சில பௌத்த பீடாதிபதிகள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மனு சமர்ப்பித் திருக் கின்றனர்.

சிஹல உறுமயவும் அதனோடு இணைந்த சில பௌத்த அமைப்புகளும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை தீவிர மாக எதிர்க்க கங்கணம் கட்டி நிற்கின்றன. இதற்கான போராட்டங்கள் தொடர்பாக விரைவில் முடிவெடுக்க இருக் கின்றன. சிஹல உறுமய தனது வெளிநாட்டுக் கிளைகளை



முடுக்கிவிட்டிருக்கிறது.

ஜே.பி.வி. எதிர்வரும் 9ஆம் திகதி முதல் தொடர்ந்தும் 10 நாட்களுக்கு தீவிர போராட்டங்களை சிறிலங்கா முழுவதும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. எவ்வாறான இடைக்கால நிர் வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதனை எதிர்ப்பது என ஜே.வி.பி. முடிவு செய்திருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான போராட்டங்களும் எதிர்வரும் வாரங்களில் தீவிர மடையக்கூடிய நிலையே காணப்படுகின்றது. ஒருபுறம் தொழிற்சங்க நடவடிக்கைகளும் மறுபுறம் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான போராட்டங்களுமாக அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகள் தீவிரமடையவுள்ளன. கடந்த 18 மாத ஆட்சிக் காலத்தில் சமாதான முயற்சிகளில் தீவிர நடவடிக்கை எதனையும் எடுக்காத - அதாவது சமாதானத் திற்கு எதிரான சக்திகள் வலுவிழந்திருந்த காலப் பகுதியில் செயற்படாத ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இப் பொழுது அதற்கெதிரான சக்திகளும் இனவாதிகளும் புத்து யிர் பெற்றிருக்கையில் எவ்வகையான நடவடிக்கையில் ஈடுபடப்போகின்றது?

---

# முரசுமோட்டை, தருமபுரத்தில் கரைச்சி ஆயுர்வேத வைத்தியசாலை

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேசசபை முரசுமோட்டை உப அலுவலகத்தில் வாரத்தில் மூன்று நாட்களும், தருமபுரம் கி.சே. அலுவல கத்தில் வாரத்தில் மூன்று நாட்களும் கரைச்சி பிரதேச சபையின் இலவச ஆயுர் வேத வைத்தியசாலை இயங்கி வரு கின்றது.

இதுகுறித்து கரைச்சி பிரதேசசபை முரசு மோட்டை உப அலுவலகப் பொறுப் பதிகாரியுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

மேற்படி இலவச ஆயுர்வேத வைத்திய சாலை ஆரம்பத்தில் முரசு மோட்டை உப அலுவலகத்திலேயே வாரம் ஆறு நாட் களும் இயங்கிவந்ததாகவும் தூர இடங் களில் இருந்து நோயாளர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் சிகிச்சைபெறு வதற்கு வருவதையிட்டு தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் நலன்கருதி விசேட ஆணையரினால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரி வித்தார். (சோ)

# கொல்லவிளாங் குளம் பகுதியில் பெருமளவு கோடா கைப்பற்றப்பட்டது

கொல்லவிளாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் கசிப்புவேட்டையில் ஈடுபட்ட துணுக்காய் காவல் பணிமனையினர் கசிப்பு விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்களைக் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து ஒரு தொகுதி கசிப்பும் 420 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த நபர்கள் மல்லாவி தமிழீழ நீதி மன்றில் முன்னிறுத்தப்பட்டதுடன் கைப் பற்றப்பட்ட கசிப்பு, கோடா உபகரணங்களும் முற்படுத்தப்பட்டன.

# வீதியோரமுள்ள பற்றைகளை அழிக்க நடவடிக்கை எடுக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

மக்கள் குடியிருப்பு காணிகளுக்கு முன்னால் உள்ள பற்றைகளை அழித்து சுகா தாரத்தைப் பேணவும், வீதிகளில் மக்கள் அச்சமின்றிப் பயணிக்கவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் குடியிருப்பாளர் களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வீதி ஓரங்களிலுள்ள பற்றைக்காடுகளை இல்லா தொழிக்க முன் வரவேண்டும்.

இவ்வாறு கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டுகை விடுத் துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கை யில், மக்கள் பெருமளவில் தங்கள் தங்கள் சொந்தக்காணிகளில் தற்போது மீளக்குடிய மர்ந்துள்ளனர். இவர்கள் தங்கள் காணிகளைச் சுத்தமாக்கி குடியிருந்து வருகின்றனரே யொழிய காணிகளுக்கு முன்னால் வீதி ஓரங் களில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டி அழிக்க முன்வரவில்லை. இது வேதனைக் குரிய விடயமாகும்.

இதன் காரணமாக வீதிகளால் பயணிப் பவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதுடன் இப் பற்றைக்காடுகளால் மக்கள் பல எதிர்பாராத சம்பவங்களையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

எனவே அந்தந்தப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் பிரதேசசபையினரின் ஒத்தாசை யுடன் மேற்படி குடியிருப்புக் காணி உரிமை யாளர்களை பற்றைக்காடுகளை அழிக்க விதப்புரைகளை வழங்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். (சோ)

# சுதந்திரக் கட்சியின் சம்மேளனக் கூட்டம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 52 ஆவது வருடாந்த சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் செப்-2ம் திகதி குருணாகலயில் வெலகெதர விளையாட்டு மைதானத்தில் நடத்துவது தொடர்பாக அக் கட்சி தீர்மானித்துள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் நடைபெறவுள்ள அக் கூட்டத்தில் கடந்த நாட்களில் வெளியிடப்பட்ட கட்சியின் புதிய கொள்கைகள் வெளியிடவும் அனுமதி வழங்கு வது பற்றிக் கருத்தில் எடுக்கப்படவுள்ளது.

# பேச்சுவார்த்தைகளைத் தொடங்க — மற்றொரு சந்தர்ப்பம்

**சிறிலங்கா அரசாங்கம் இறுதியாகச் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த நகல் திட்டத்தினை விடுதலைப்புலிகள் நிராகரிக்காத நிலையிலும், அரசாங்கத்தின் நகல் திட்டத்தைத் தீவிரமாகப் பரிசீலித்து வரும் விடுதலைப் புலிகள் மாற்றுத் திட்டம் ஒன்றுடன் கூடியதான தமது பதிலை அரசாங்கத்திற்கு அளிக்கப்போவதாகவும் கூறியுள்ளனர். இதனை, மற்றொரு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் புலிகள் தயாராக இருப்பதை வெளிப்படுத்தும் சமிக்ஞையாகக் கொள்வது தவறாகமாட்டாது.**

விடுதலைப்புலிகளுக்கும்-அரசாங்கத்திற்கும் இடையிலான மற்றொரு தடவை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கானதொரு சந்தர்ப்பத்தை விடுதலைப்புலிகள் தோற்றுவிக்க முனைவது வெளிப்படுவதாக உள்ளது. சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படாத நிலையில் நின்று போன பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கக் கூடியதற்கான சமிக்ஞைகள் விடுதலைப்புலிகளால் வெளிப்படுத்தப்பட்டு வருவதை அண்மைய நிகழ்வுகள் காட்டுவதாய் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் இறுதியாகச் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த நகல் திட்டத்தினை விடுதலைப்புலிகள் நிராகரிக்காத நிலையிலும், அரசாங்கத்தின் நகல் திட்டத்தைத் தீவிரமாகப் பரிசீலித்து வரும் விடுதலைப்புலிகள் மாற்றுத் திட்டம் ஒன்றுடன் கூடியதான தமது பதிலை அரசாங்கத்திற்கு அளிக்கப் போவதாகவும் கூறியுள்ளனர். இதனை, மற்றொரு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் புலிகள் தயாராக இருப்பதை வெளிப்படுத்தும் சமிக்ஞையாகக் கொள்வது தவறாகமாட்டாது.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஏற்கனவே சமர்ப்பித்த இரண்டு திட்டங்களை விடுதலைப்புலிகள் உடனடியாகவே நிராகரித்திருந்தனர். இந்நிலையில் மூன்றாவது திட்டத்தை நிராகரிக்காது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளமையானது அத்திட்டமானது, தமிழ் மக்களின் எதிர்பார்க்கைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது என்பதினால் அல்ல. சமாதான முயற்சிகளில் முக்கிய கட்டமான நேரடிப் பேச்சுவார்த் தைகளில் அரசாங்கம் முன்னேற்றகரமான திட்டங்கள் எதையும் கொண்டு வருமா? அன்றி கொண்டுவரச் செய்ய முடியுமா? என்பதன் அடிப்படையிலேயே ஆகும்.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்பொழுது முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக நகல் திட்டத்திற்கும் விடுதலைப் புலிகள் கோரியிருந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கும் இடையில் பெரியதொரு இடைவெளி உள்ளதொன்றாகவே உள்ளது. அரசாங்கம் முன்வைத்துள்ள நகல் திட்டம் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளியான தகவலின் படி, இந் நிர்வாகக் கட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் இருந்து அதன் அதிகாரங்கள் வரையில் வேறுபட்டதாகவே உள்ளது.

இவ் வேறுபாடுகளில் மேலெழுந்தவாரியாகவே சுட்டிக்காட்டக் கூடிய மூன்று விடயங்கள் உள்ளன.

1. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பதற்குப் பதிலாக தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு என நகல் திட்டம் பெயரில் மாற்றத்தைக் கொண்டுள்ளது.

2. சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்டதாக இவ்விடைக்காலக் கட்டமைப்பு இருத்தல் வேண்டும் என்பது நிராகரிக்கப்பட்டு, அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்தில் வரைவு இடம்பெற்றுள்ளது.

3. முக்கிய அதிகாரங்கள், குறிப்பாக காணி, வரி, பொலிஸ் பாதுகாப்பு என்பன, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு மறுக்கப்பட்டதாகவுள்ளது.

இத்தகையதொரு நிலையிலும் விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் நகல் திட்டத்தினைப் பரிசீலிக்க தயாராகி உள்ளமையானது, சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றதன் வெளிப் பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆனால், விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ள மாற்று யோசனைகள் எவையாக இருக்கும் என்பது பற்றி உறுதியாகவோ அன்றி ஊகத்தின் அடிப்படையிலோ பெரிதாக எதனையும் கூறிவிட முடியாது விட்டாலும், அவர்களின் மாற்று யோசனைகளில் வடக்கு-கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு விடயத்தில் பூரண அதிகாரங்களுடன் கூடியதானதொரு நிர்வாகக் கட்டமைப்பை அவர்கள் கோரமுடியும் என்பதைப் புலிகளின் அண்மைய பேச்சுக்கள் உணர்த்துபவையாகவுள்ளன.

அதிலும் குறிப்பாகக் கடந்த வாரத்தில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த விடுதலைப்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஊடகவியலாளர் மத்தியில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் குறித்துப் பிரஸ்தாபிக்கையில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய கருத்துக் களைப் பிரதிபலித்ததைச் சுட்டிக் காட்ட முடியும்.

" மக்களை மீளக் குடியேற்றுவது, புனர்வாழ்வு புனரமைப்புக்களை மேற்கொள்வது என்பதெல்லாம் இடைக்கால நிர்வாகமாகிவிடாது. இதனை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று செய்துவிடலாம். உயர்பார்துகாப்பு வலயமும் இடைக்கால நிர்வாக சபைக்குள் உள்ளடக்கப்பட வேண்டும். யாழ்.குடா நாட்டில் 30 சதவீதமான மக்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் சொந்த இடங்களில் மீளக் குடியேற முடியாத நிலையில் உள்ளனர். நமது மக்கள் உரிமை பெற்ற இனமாக வாழ வேண்டும். அவர்களுக்கான சமூக பொருளாதார நிலைமைகள் சீரமைக்கப்பட வேண்டும். ஏனைய சமூகங்களைப் போல் சமஉரிமைகள் என்ற சுதந்திரப் பிரஜைகளாக வாழ வேண்டும்" என்ற புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனின் கூற்றுக்கள் விடுதலைப்புலிகளின் எதிர்பார்க்கையை வெளிப்படுத்துபவையாகவே அர்த்தம் கொள்ளத்தக்கவையாகும்.

அதாவது, அரசாங்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கெனப் புலிகளிடம் சமர்ப்பித்த நகல் திட்டமானது, ஒரு முழுமையான நிர்வாகக் கட்டமைப்பு என்ற ரீதியில் அமையப்பெறாது. வடக்கு-கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கானதொரு சபை போன்று அமையப் பெற்றுள்ளமையானது, விடுதலைப்புலிகளின் எதிர்பார்க்கைக்கு மாறுபட்டதொன்றாகும். அதாவது விடுதலைப்புலிகள் ஓர் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பையே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பாகக் கோரியிருந்தமை தெளிவானதும், வெளிப்படையானதும் ஆகும்.

ஆனால், அரசாங்கம் திட்ட வரைவில் குறிப்பிட்டதன்படி புனர்வாழ்வுப் புனரமைப்புப் பணிகள் கூட அதிகாரத்துடன் கூடிய தொன்றாக இருக்கவில்லை. ஆகையினால், ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றைப் போல் பணியாற்ற விடுதலைப்புலிகள் தயாராக இருக்கப்போவதில்லை.

ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கம் அடிப்படையிலேயே அரசியல் சார்ந்த அமைப்பாகும். தமிழ்மக்களின் அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்கும் நோக்கிலேயே விடுதலைப்புலிகள் இயக்கம் தமது ஆயுதப் போராட் டத்தை முன்நிறுத்தியது. தற்பொழுதும் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், ஒரு அரச சார்பற்ற நிறுவனம் போல் விடுதலைப்புலிகள் அமைப்பை நோக்குவதோ, செயற்படும் என எதிர்பார்ப்பதோ மடமையாகும்.

யுத்தத்தினால் பாதிப்பிற்கு உள்ளான மக்களுக்கு உடனடியாக புனரமைப்புப் பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்வது வழமையானதொன்றே, ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பணிகளை மேற்கொள்கையில் மக்களின் அடிப்படை உரிமைகள் குறித்து கவனம் செலுத்துவது கிடையாது. அவ்வாறு அவை கவனம் செலுத்தினாலும் கூட அரசாங்கத்தினால் நிராகரிக்கப்படவும் ஓரம் கட்டப்படவும் முடியும்.

ஆனால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் அடிப்படை உரிமையுடன் கூடியதான வகையிலும். நிரந்தரமான ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது, அரசியல் சார்ந்த அமைப்பு என்ற ரீதியில் விடுதலைப்புலிகளின் கடப்பாடாகவுள்ளது. அதாவது,ஓர் அரச சார்பற்ற நிறுவனம் பொது இடங்களிலோ யாருக்கோ உடமையானதொரு காணியில் அகதிகளைக்குடியமர்த்தவோ அன்றி அவர்களின் நெருக்கடிக்குத்தீர்வு காணவோ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுபோன்று விடுதலைப்புலிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்என்பதுசாத்தியமாகமாட்டாது.

மக்கள் தமது சொந்த நிலங்களில், சுதந்திரமாக இயல்பு வாழ்க்கை வாழக்கூடியதான வகையில், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகையினால், அரசாங்கத்திடம் விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது, மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்தக்கூடியதான அதிகாரங்களைக் கொண்டதாக இருத்தல் அவசியமானதொன்றாகும். இதற்கு உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியிலோ அன்றி வேறுவிதத்திலோ, தடைகள் உருவாகுமானால், புனர்வாழ்வு புனரமைப்பு என்பது சாத்தியப்பாடற்றதொன்றாகிவிடும் . ஆகையினால் ரணில்அரசாங்கம் வழங்கியுள்ள திட்டவரைவைப் பரிசீலித்துவரும் விடுதலைப் புலிகள்- அத்துடன் சேர்ந்ததாகச் சமர்ப்பிக்கவுள்ள மாற்று யோசனைகளில் மேற்கூறப்பட்ட விடயங்கள் போன்றவை உள்ளடக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கானதாக இருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் நகல் திட்டத்தை நிராகரிக்காது மாற்றுத் திட்டம் ஒன்றை முன்மொழியவுள்ளமையானது, விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வழங்கும் ஆதரவாகவே கொள்ளத்தக்கதாகும். இது சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக விடுத்து வரும் கோரிக்கைக்கு மதிப்பளிப்பதாகவும் நோக்கத்தக்கதாகும்.

ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டாலும், அது வெற்றிபெற வேண்டுமானால் அரசாங்கம் தாண்டி வரவேண்டிய தூரம் அதிகமாகவே இருக்கும். ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பலசுற்றுக்களைக் கொண்டதாக இருந்த போதும் அதில் வெற்றிபெற முடியாமல் போனமைக்கு அரசாங்கம் தென்னிலங்கையில் தோன்றிய எதிர்ப்புக்களை வெற்றி கொள்ள முடியாமையோ அன்றி தமக்குத் தாமே எல்லைகளை வகுத்துக் கொண்டமையோ காரணமாக இருக்கலாம். ஆனால் இம்முறையும் அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளுமானால், இம்முறையும் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பது கடினமானதாகிவிடும்.

ஆகையினால் அரசாங்கம் புலிகளின் மாற்றுத திட்டத்துடன் கூடிய நகல் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காகப்பல தடைகளைத்தாண்டத் தயாராக இருத்தல் அவசியம். அவ்வாறு இல்லாதுவிடில் பேச்சுக்கள் ஆரம்பிக்காதே போகலாம். அன்றி ஆரம்பித்துப் பயன் இன்றியும் போகலாம்.

□□□□□ **-ஜெயராஜ்**

# ஜேர்மனி, போர்த்துக்கல், கனடாவில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காட்டில் தீ

ஜேர்மனி, போர்த்துக்கல், கனடா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்புக் காடுகள் இத்தீயில் கருகிப் போயுள்ளன.

ஜேர்மனியில் பீற்றர்பேக் எனப்படும் பகுதியில் முன்னாள் இராணுவப் பயிற்சி முகாம் அமைந்துள்ள இடத்தில் நேற்று முன்தினம் காட்டுத்தீ பரவியது. இதனை அணைக்க உலங்கு வானூர்தி உதவியுடன் தீயணைக்கும் படையினர் போராடி வருகின்றனர்.

இதேபோல் கனடாவில் காம்ரூம் எனும் வனப் பகுதியிலும் பயங்கரமான காட்டுத்தீ பரவியுள்ளது. இந்த தீயை அணைக்க இராணுவத்தினர் உட்பட 2000 பேர் போராடி வருகின்றனர். அப்பகுதி முழுவதும் புகைமூட்டம் சூழ்ந்தமையினால் அப்பகுதிகளில் வாழ்ந்த 4000 பேர் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேபோல் போர்த்துக்கல் நாட்டில டாம்பீரோ எனும் பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இதுபோன்ற ஒரு தீ விபத்து அங்கு இதுவரை ஏற்படாததால் அந்தப் பகுதியை அந்த நாட்டு அரசு தேசிய பேரழிவுப் பகுதி என அறிவித்துள்ளது.

**- வாக்களிக்க அனுமதிக்காமை தொடர்பாக -**

# வன்னி வாக்காளர் தாக்கல் செய்த மனு மீது விசாரணைகள்

தம்மை வாக்களிக்க அனுமதிக்காமை அடிப்படை உரிமை மீறல் எனத் தெரிவித்து வன்னிப் பிரதேச வாக்காளர்கள் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. இதன் அடிப்படையில் விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ம் திகதி இடம்பெறவிருக்கிறது. இதற்காக மூன்று நீதியாளர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலின் போது தம்மைப் படையினர் வாக்களிக்க அனுமதிக்காமையானது அடிப்படை உரிமை மீறல் எனத் தெரிவித்து வன்னிப் பிராந்தியத்தின் எட்டு வாக்காளர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இதில் தேர்தல் ஆணையாளர் இராணுவ அதிகாரிகள் உட்பட்டோர் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். ஏற்கனவே இது போன்ற மனுவொன்றை மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வசித்த எட்டுப்பேர் தாகக்ல் செய்திருந்தனர். இதற்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் தீர்ப[illegible]ளித்ததும் குறிப்பிடத்தக்கது.

# எமது மொழி, இனத்தின் அடையாளத்தை இழக்கக்கூடாது இதனைக் காக்கவே போராட்டத்தை முன்னெடுக்கிறோம்

## தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்





எமது மொழி, எமது இனம் தனது அடையாளத்தை எதிர்காலத்தில் இழந்து விடாமல் இருக்கவேண்டும். இதற்குஎமதுமொழியில் கலக்கின்ற, ஊடுருவுகின்ற பிறமொழித் தாக்கங் களிலிருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும். இந்த நோக்கோடுதான் மண்ணைக் காப்பதற்காக நாம் ஒரு போராட்டத்தை நடத்தி வருகிறோம். இவ்வாறு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத் தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்ப்பெயர்க் கையேடுநூல் வெளி யீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித் ததாவது,

ஒருவருக்கு வைக்கப்படுகின்ற பெயர் அவரை எந்த இனத்தவர் எந்த நாட்டவர் என்பதைச் சுட்டி நிற் கக்கூடியதாகஅமைவதே பொருத்த மானதாகும். ஆனால் எம் இனத்த வர்களிடையே தற்போது அவர்கள் யார் என்கின்ற எண்ணம் கூட இல் லாத நிலை இருந்து வருகிறது.

தமிழன் என்று ஓர் இனம் உண்டு. தனியே அதற்கொரு குணம் உண்டு என்பார்கள் அந்த பண்டைத் தமிழ்ப் பெருமையை எல்லாம் எடுத்துக் கூறத்தக்க அளவிலேயே எமது முன்னோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் மிகச் சிறப்பாக உலகில் அந்தக் காலத்தில் இருந்த அரசுகளுடன் ஈடுகொடுக்க வேண்டிய அளவுக்கு மிகப் பெரும் அரசுகளை வழி நடத்தியவர்களாக, சிறந்த மொழிக்குச் சொந்தக்காரர்களாக, சிறந்த பண் பாட்டுப் பெருமைகள் உடைய வர்களாக அன்று இருந்தார் கள். அவர்கள் தம்மைப் பெரு மைப்படுத்தக் கூடிய வகை யில் தங்களது பெயர்களை தமது இனத்தை சுட்டக் கூடிய அளவிலே சிறப்பாக வைத்தி ருந்தனர். அது பொது மக்க ளில் இருந்து அப்போது ஆட்சி நடத்திய மன்னர்கள் வரை இருந்தது.

ஆனால் பிற்காலத்தில் பொற்காலம் என்று கூறக் கூடிய ஆட்சியை நடத்திய தமிழர்கள் கூட தமது பெயர் களை பிறமொழிகளில் மாற்றிக்கொண்டு அதனால் பெருமைப்பட்டுக் கொள்கின்ற இழி நிலை இருந்தது. அதனால் தான் அன்றைய நல் ஆட்சி ஒரு இனத்தின் அடையாளத்தை இழந்து, பண்பாட்டின் தன்மையை இழந்து, பிறமொழிகளுக்கு அடிமையாகி ஒரு அடிமை நிலைக்கு இன்று தள்ளப்பட்ட நிலையில், நாம் யார் என்று எமது பெருமைகளை எடுத்துக் கூறக் கூடிய வகையிலே எமது பெயர்கள் எமது இனத்தை சுட்டக் கூடிய வகையிலே சூட்டிக் கொள்கின்ற பழக்கம் படிப்படியாக அற்றுப் போகின்ற தன்மைகளை நாங்கள் பார்க்கின்றோம்.

ஒரு மொழியியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் எந்த மொழியும் மொழிச்சிதைவும் மொழியில் பிறமொழிகள் ஊடுருவி கிளைமொழி கள் உருவான வரலாறுகளை எடுத் துப் பார்க்கின்ற போது மொழித் தூய்மை பேணுதல் என்பது அந்த இனத்தின் காப்புக்கு முதன்மையா னது என்பதை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

2000ஆம் ஆண்டுகளுக்கு முன் பிருந்த தமிழகம் இன்று இல்லை, தமிழ் மண் இன்றில்லை. பெரும் பாலான மண் பிறமொழிக்குப் உரியதாக மாறிவிட்டது.தமிழ் மொழி பேசுபவர்களின் தொகையும் அன்றி ருந்த தொகையைவிட கால்ப் பங்காக குறைந்துள்ளது.

தமிழக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் 2000 ஆண்டுக்கு முன்னர் தமிழராக இருந்தவர்கள் இமயம் வரை படை எடுத்துக், கனகவிஜயர் தலையிலே கல்லை எடுத்துக் கண்ணகிக்குக் கோவில் கட்டினான் சேரன் செங்குட்டுவன் என்று பெருமைப்பட்டோம்.

அந்தச் சேரன் பரம்பரை இன்று மலையாளிகளாக மாறிவிட் டார்கள்.2000ஆண்டுகளுக்கு முன்னர் தமிழராக இருந்து மலையாளிகளாக மாறியவர்கள் இன்று தமிழரை எதிர்க்கின்ற நிலைஉருவாகி உள்ளது.

இவற்றை எல்லாம் எடுத்துப் பார்க்கின்ற போது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தனித் தமிழராக இருந்தவர்கள். பிறமொழிக் கலப்பினால் பிறமொழி ஊடுருவலால் எந்த அளவுக்கு அவர்களை மாற்றித் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுகின்ற இந்த நிலையை உணர்வோ மேயானால் எதிர்காலத்தில் எமது மொழி, எமது இனம் தனது அடையாளத்தை இழந்துவிடாமல் இருக்க வேண்டு மேயானால் நாங்கள் எமது மொழியில் கலக்கின்ற, ஊடுரு வுகின்ற பிறமொழித் தாக்கங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும். அந்த நோக்கோடுதான் மண்ணைக் காப்பாற்றுவதற்காக நாம் ஒரு போராட்டத்தை நடத்தி வருகிறோம்.

எமது மொழிக்குள்ஊடுருவுகின்ற ஊடுருவல்களைத் தடுத்து எமது மொழித் தூய்மையைத் தொடர்ந்தும் பயன்படுத்த வேண்டும் என்ற நோக் கில் எமது விடுதலை இயக்கம் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு கழகத்தைநிறுவிஅதனூடாகத் தமிழ் மொழியைக் காக்கின்ற ஒரு பங்க ளிப்பையும் மேற்கொண்டு வருகின் றது.

உலகிலேயே எமது மொழியினர் தான் எமது மொழியைப் பேசுவ தற்கு அகரமுதலியைத் தேடுகின்ற ஒரு இழிநிலை ஏற்பட்டுள்ளது.

நடைமுறையிலே நாம் பன்படுத் துகின்ற மொழியிலேயே பல விழுக்காடு பிற மொழிச் சொற்களை அதாவது வடசொற்கள் ஐரோப்பிய சொற்கள் என்பவற்றைப் பயன்டுத்துகின்றோம். இதைப்பலர் தெரிந்து பயன்படுத்துகின்றனர், சிலர் தெரியாது பயன்படுத்துகின் றனர்.

இன்று தாம்பேசுவது தமிழ் என்று நினைத்துக் கொண்டு பிறமொழிகளை பேசுகின்ற ஒருதன்மைஇருந்து கொண் டிருக்கின்றது. அவற்றை எல்லாம் நீக்க வேண்டும் என்பதற்காக நாம் பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற பிறமொழிச் சொற்களை இனங் கண்டு அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கி நடை முறைப்படுத்த தமிழ் வழிகாட்டி என்கின்ற ஒரு நூலை எமது தமிழ் வளர்ச்சிக்கழகம் வெளியீடாக வெளியிட்டது.

நாங்கள் எமது பெயர்களை தமி ழில் வைக்க வேண்டும் என்கின்ற கட்டாயத்தை எம்மவர்களுக்கு உணர்த்துகின்ற வகையிலேயே இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இன்று எமது நிலத்தின் பெரும் பகுதி மாற்றாரால் கவரப்பட்ட நிலை யில் தமிழ்ப் பகுதிகளின் பெயர்கள் சிங்களத்தில் மாற்றப்பட்டுள்ளது என்பதை நினைத்து நாம் கொதிப்படைகின்றோம். அதேபோல் அரசு எமது மாணவர்களின் தொண் டைக்குள் புரியாத மொழிகளைத் திணித்து, புரியாத சொற்களைத் திணித்து மாணவர்களின் நினைவில் நிற்காதபல சொற்களைப் பாடநூல் களில் புகுத்துகின்றது.

அதுமட்டுமல்ல, தமிழ்ப் பெயர்களாக இருந்த பல நிறுவனப் பெயர்கள் இன்று சிங்களப் பெயர் களாக மாற்றப்பட்டுவருகின்றன.

இத்தகைய செயல்கள் எம்மீது சிங்கள அரசும் எதிரிகளும் திணிக் கின்ற செயற்பாடுகள். இவற்றை நாம் வெல்ல வேண்டும். ஆனால் நாமே எம்மை அடையாளப் படுத்து கின்ற பெயர்களை தமிழ் மொழியில் வைத்துக் கொள்ள வேண்டும். எதிர் காலத்தில் எமது மண்ணின் பெயரா னாலும்சரி,நிறுவனங்களின் பெயரா னாலும் சரி, எமக்கு வைக்கின்ற பெயரானாலும் சரி அவற்றை வைத்து எதிர்காலத்தில் ஆய் வாளர்கள், வரலாற்றாளர்கள் எழுது கின்ற போது இது தமிழர்களின் பெயர் என உறுதியாகத் தெரியும் வகையில் அமையவேண்டும்.

இன்றும் யாழ்ப்பாணத்தில் பல பெயர்கள் சர்ச்சைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. கடந்த காலத் தில் தமிழ்ப் பெயர்கள் என எண்ணி சிங்களப் பெயர்களை சில ஊர்களுக்கு சூட்டியதனால் யாழ்ப் பாணத்தில் சில ஊர்களை சிங்கள ஊர்கள்.சிங்களவர்கள் வாழ்ந்த ஊர்கள் என்று அரசு கூறுகின்ற நிலைக்குத் தள்ளி இருக்கிறது.

எனவே மக்களுக்கு வைக்கப் படுகின்ற பெயர்கள் மட்டுமல்ல, ஊர்ப் பெயர்கள், இடப் பெயர்கள், தொழில் நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைக் கூட நாம் தமிழ் மொழியில்ஆக்கிப் பயன்படுத்து கின்ற ஒரு நிலை வரவேண்டும்.

அந்த வகையில் மக்களுக்கு இடுகின்ற பெயர்களை வழிகாட்டக் கூடிய வகையில் இந்த தமிழ்ப் பெயர்க் கையேட்டு நூல் துணை நிற்கின்றது.

நாம் இந்த நூலை வெளியிடு வதன் நோக்கம் எமது இன அடை யாளத்தை இனத்தின் பெருமையை தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கும் எதிர்காலத்தவர்களுக்கு உணர்த்து வதற்கும் ஏற்ற நிலையில் தான் அமைகிறது.

எமதுதமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயற்பாடுகள் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றும் தமிழ் என் கின்ற வகையிலே அமையும் என்ப தோடு எமது விடுதலைப் போராட் டத்திற்குத் தருகின்ற ஆதரவு போன்று எமது மொழியாக் கத்துக் காக நாங்கள் நடத்துகின்ற எமது இயக்கங்களிலும் உங்களது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்றார். (லோ)


சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும் 6-8-2003



திருமதி ஞா. கனகையா

அதிபர்

மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி

நாற்பத்திரண்டு ஆண்டுகள் ஆசிரியராக, அதிபராக சேவையாற்றி அறுபதாவது வயதில் ஓய்வு பெறும் இந்நாளில் தங்கள் சேவையைப் பாராட்டி நிற்பதோடு, பிறந்த இந்நன்நாளில் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

நன்றி

மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி.
ஆசிரியர், ஊழியர்கள்,
மாணவர்கள்.

(க-7771)


## யாழ்.கச்சேரியில் மக்கள் சிரமம்!

யாழ். கச்சேரியில் வழிகாட்டி உத்தியோகத்தர் இல்லாததால் மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

கச்சேரியின் வழிகாட்டி உத்தி யோகத்தர் நீண்டகாலமாக மாற்றப் பட்டதை அடுத்து அந்த இடத்தை நிரப்ப புதிய உத்தியோகத்தர் இது வரையும் நியமிக்கப்படாததால் கச்சேரிப்பகுதிக்குச் செல்லும் மக்கள் தங்களது தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது மிகவும் கஸ்டப்படுகிறார்கள். இது தொடர் பாக யாழ். அரச அதிபர் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக் காது மௌனமாக இருப்பது குறிப் பிடத்தக்கது. (33)

## பொருட்கள் வழங்கல்

பளை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பேரளை, தர்மக்கேணிப்பகுதியில் வசித்து வந்த குடும்பங்களுக்கு கடந்த 30ஆம் திகதி மண்வெட்டி கோடரி, குப்பைவாரி, அருவி அரிவாள் போன்ற பொருட்கள் வழங்கப்பட் டன. குடும்ப அங் கத்தவர்களுக்கு ஏற்றவகையில் இந்தப் பொருட்கள் வழங்கப் பட்டன.இதே பொருட்களை பளை முல்லையடியில்வசித்தகுடும் பங்களுக்கும் வழங்கப்பட்டன. (11)


ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 25 - 05 - 1972



மண்ணின் மடியில் 06 - 08 - 2002

நாட்டுப்பற்றாளர்

முருகேசு- இரவீந்திரன்
(ரவி மேவின்)

சேனையூர் மூதூர் திருமலை.

பாசத்தை பொழிந்து
நேசத்துடன் பழகிய நண்பனே
காலம் ஆண்டு ஒன்று கடந்தாலும்
கலையாதது உன்னினைவுமட்டுமல்ல
உன்னுடன் பழகிய நாட்களும்தான்.

பொறுப்பாளர்,
பணியாளர்கள்,
திரைப்பட வெளியீட்டுப்பிரிவு

(3604)



**சிந்தனைக்கு**

நான் எப்பொழுதும் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே. செயலால் வளர்ந்த பின்புதான் நாம் பேசத் தொடங்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-08-2003

## அநுராவின் கனவு?

உயிரைத் தியாகம் செய்தாவது மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை உருவாக்க இருப்பதாக பொ.ஐ. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும். சனாதிபதியின் ஆலோசகரில் ஒருவருமான அநுரா பண்டாரநாயக்க சூளுரைத்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டணி 'பிள்ளையார் திருமணம்' போன்று இழுபட்டுச் செல்கையில் அநுரா பண்டாரநாயக்கவின் இவ் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

ஆனால், அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு உயிரைத் தியாகம் செய்யும் அளவிற்கு ம.வி. முன்னணியுடனான கூட்டு அவருக்கு ஏன் அவசியமாகியுள்ளது? மீண்டும் ஆட்சி அதிகாரத்தை பண்டாரநாயக்கவின் குடும்பத்தினர் கையில் கொண்டு வருவதற்காகவா? அன்றி எதிர்க்கட்சித்தலைவரான மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் செல்வாக்கை இல்லாது ஒழித்து சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்காகவா?

சிறிலங்கா அரசியல்வாதிகள் எவரும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அன்றி ஆட்சி அதிகாரத்தைத்தக்க வைத்துக் கொள்வதற்கு எவருடனும் கூட்டுச் சேரவும், உறவாடவும் தயாராகவே உள்ளனர். இவர்கள் இதில் சுய கௌரவம் எதையும் பார்ப்பதும் இல்லை. கொள்கை, கோட்பாடுகள் குறித்துச் சிந்திப்பதும் இல்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்று ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதற்கு எத்தகைய விட்டுக் கொடுப்புக்களையும் செய்வதற்குத் தயாராகவுள்ளது. அநுராவின் வார்த்தையில் கூறுவதானால், 'உயிரைத் தியாகம்' செய்யும் அளவிற்கு இவ்விட்டுக் கொடுப்பு உள்ளது. ஆனால், சிறிலங்காவின் ஆட்சித் தலைவராக வரத்துடிக்கும் அநுரா பண்டாரநாயக்க இக்கூட்டிற்காக தனது உயிரைத் தியாகம் செய்வாரா? என்பது வேறுவிடயம். சிலவேளை இக்கூட்டிற்கு இடையூறாகவுள்ள சிலரது உயிரை அவர் தியாகம் செய்ய அன்றிப் பலியிட தயாராக இருக்கலாம்.

ஆனால், இக்கூட்டணிக்காக ஏற்கனவே இவ்விரு கட்சிகளுக்காக / அமைப்புக்களுக்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் மறக்கப்பட்டு விட்டார்கள் என்பது தான் வருந்தத்தக்க தொன்றாகவுள்ளது. இன்று சனாதிபதியாகவும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாகவும் உள்ள சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் ஜே.வி.பி.யினரால் படுகொலை செய்யப்பட்டவராவார். இக்கூட்டணியின் மூலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அவரது கணவரின் படுகொலை மறக்கப்பட்டதாகிவிட்டது. மேலும், அழுத்தமாகக் கூறுவதானால் கணவரே மறக்கப்பட்டவராகிவிட்டார்.

விஜயகுமாரணதுங்க படுகொலை செய்யப்பட்ட போது, அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இல்லாதவராக இருந்திருக்கலாம்– ஆனால், 'சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்த பின்னரும் தனது கணவரின் படுகொலையை தனது அரசியலுக்கு மூலதனமாக்கியிருந்தார் என்பதும், அதன் மூலம் அவர் பெரும் அரசியல் இலாபம் ஈட்டிக் கொண்டார் என்பதும் மறுக்கப்பட முடியாதவை.

சுதந்திரக்கட்சி தரப்புத்தான்அவ்வாறென்றால் ஜே.வி.பி.யின் நடவடிக்கையோ அதைவிட அபத்தமானதொன்றாக உள்ளது. தமது முதலாவது கிளர்ச்சியின் போது தமது அமைப்பைச் சேர்ந்த பல ஆயிரக்கணக் கான இளைஞர்–யுவதிகள் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த சுதந்திரக் கட்சியுடன் அன்று ஆட்சியில் இருந்தவர்கள் கூட்டுச் சேர்வதற்கு அது தன்னைத் தயார் படுத்திக் கொண்டுள்ளது.

அதாவது, தமது கட்சிக்காக தமது உயிரைத் தியாகம் செய்த 'தோழர்களை' அது மறந்துவிட்டது. இத்தனைக்கும் அவர்கள் தமது கூட்டணிக்குக் காரணமாகக் கூறிக் கொள்வது 'நாட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்பதே. அதாவது 'நாட்டை விடுதலைப்புலிகளிடம் தாரை வார்த்துக் கொடுக்க முனையும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பதவியில் இருந்து அகற்றுவதற்காகவே.

ஆனால், இக்கூட்டணி எதற்கானது என்பது அரசியல் அறிந்த அனைவருக்கும் அப்பட்டமாகத் தெரிந்ததொன்று. அதாவது ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும்– விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்குமானதே ஆகும்.

இதேவேளை. ஆட்சிக் கவிழ்ப்பு என்ற ரீதியில், அநுரா பண்டாரநாயக்க உயிர்த்தியாகம் செய்யாமலே அவர் கூறும் கால எல்லைக்குள்– அதாவது, 2004 முற்பகுதிக்குள் – சிலவேளை அது சாத்தியமாகலாம். இதற்கு சு. கட்சி, ஜே.வி.பி. கூட்டு மட்டுமல்ல, வேறு சில அரசியற் கட்சிகளின் ஆதரவும், சனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரமும்கூட உதவியாக இருக்கலாம். ஆனால், இக்கூட்டணிக்காக அநுரா பண்டாரநாயக்க உயிரைத்தியாகம் செய்தாலும் செய்யாது விட்டாலும் சாத்தியப்பட முடியாததாக இருக்கப் போவது அவரது கனவான சனாதிபதி பதவி?

## இரண்டு அரசுகள் உருவாகுவதற்கான இறுதி ஆவணங்கள் கைச்சாத்தாகவுள்ளன

### தேசிய சங்க சபை குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான யோசனை நாட்டை இரண்டாகத் துண்டாடுவதற்கான அதிகாரபூர்வமான ஆவணம் என தேசிய சங்கப் பேரவை குற்றஞ் சாட்டியுள்ளது. இந்த நிலைமைக்கு முகங் கொடுப்பதற்காக தேசிய கூட்டமைப் பொன்றை உருவாக்கப் போவதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கம் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து தெளிவுபடுத் தும் முகமாக தேசிய சங்கப் பேரவை இந்த ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

எமது நாடு தற்போது தெளிவாக இரண்டாகப் பிரிந்துள்ளது. இரண்டு அரசுகள் உருவாகுவதற்கான இறுதி ஆவணங்கள் கைச்சாத்திடும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த ஆவணங்களின் பிரதிகள் அரசாங்கத்தினால் அரச தலைவியான சனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத் திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த ஆவணங்கள் குறித்துப் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணத்திலும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்திலும் பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்படி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு வடக்கு கிழக்கை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சங்கப் பேரவைத் தலைவர் கூறினார்.

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான யோசனை நாட்டை இரண்டாகத் துண்டாடுவதற்கான அதிகாரபூர்வமான ஆவணம் என தேசிய சங்கப் பேரவை குற்றஞ்சாட்டியுள் ளது.

இந்த நிலைமைக்கு முகங் கொடுப்பதற்காக தேசிய கூட்டமைப்பொன்றை உருவாக்கப் போவதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கம் புலிகளிடம் சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து தெளிவுபடுத்தும் முகமாக தேசிய சங்கப் பேரவை இந்த ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

எமது நாடு தற்போது தெளிவாக இரண்டாகப் பிரிந்துள்ளது. இரண்டு அரசுகள் உருவாகுவதற்கான இறுதி ஆவணங்கள் கைச்சாத்திடும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என அங்கு உரையாற்றிய தேசிய சங்கப் பேரவைத் தலைவர் சங்கைக்குரிய எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் அரச தலைவியான சனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதன்படி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்ற போர்வையில் விடுதலைப்புலிகளுக்கு வடக்கு கிழக்கை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் அங்கு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் யோசனைகளுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளையும் இணைத்து பலம்வாய்ந்த கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தப் போவதாக இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன கூறினார்.

## இடைக்கால நிர்வாகத்தை எதிர்ப்போர் தனிநாடு உருவாவதைத் தடுக்க முடியுமா?

### தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளர்

வடக்குக்கிழக்குக்கென இடைக்கால நிர்வாகம் வழங்கப் படுமானால் அது தனிநாடு உருவாக வழிவகுக்கும் என சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். அவ்வாறெனில் இடைக்காலநிர்வாகம் வழங்கப்படாது தனிநாடு என்று வழங்கப்பட்டால் அவர் அதனை எவ்வாறு தடுக்கப் போகிறார் என தொழிலாளர் தேசிய சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஏற்கனவே சமஷ்டி ஆட்சி என்ற அடிப்படையில் மாவட்டசபைகள் தீர்வு கொண்டுவரப்பட்டவேளை அது தனிநாட்டுக்கான முயற்சி என இனவாதிகள் கூறியிருந்தனர். அவ்வாறான நிலைப்பாடே இன்று இடைக்கால நிர்வாகத்தை வழங்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் இந்த இடைக்கால நிர்வாகத்தையும் வழங்காது போனால் தனிநாடு உருவாவதை கதிர்காமர் போன்றவர்களால் தடுக்கமுடியாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுமானால் தனிநாடு உருவாகும் எனக் கூறும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்திலேயே சிறிலங்காப்படையினர் பாரிய தோல்விகளுக்கு முகம் கொடுத்தனர் என்பது சனாதிபதியின் ஆலோசகருக்குத் தெரியாமல் இருக்கவாய்ப்பில்லை. அப்படி இருந்தும் மீண்டும் சிங்கள மக்களை அவர் இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராகத்திருப்பமுனைவது இனவாதிகளுக்குத்துணை போகும் செயல் எனவும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## குற்றச் செயல்களைப் புரிந்த 35 படையினர் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைப்பு!

### -குற்றச் செயல்களும் அதிகரிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதின் பேரில் 35 படையினர் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களிலும் பொது மக்கள் மீதும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படும் இவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களின் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைகள் பலாலி படைத்துறை விசாரணைப் பிரிவிலும், யாழ் நீதிமன்றத்திலும் நடைபெறுகிறது. இதேவேளை கடந்த சில மாதங்களாக யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஹன்ஸி குரோஞ்சே மரணம் விபத்தல்ல--------!

கிரிக்கெட் சூதாட்ட குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னாள் தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைவரான ஹன்ஸிகுரோஞ்சே விமான விபத்தில் அன்றி திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக லண்டனில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு அவர் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளாகியதில் அவரும் விமான ஓட்டிகள் இருவரும் பலியாகினர். எனினும் இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசாரணையாளர் குரோஞ்சே உயிரோடு இருந்தால் மேலும் பல சூதாட்ட உண்மைகள் வெளியாகிவிடும் எனக் கருதியோரும் இதிலிருந்து தப்ப நினைத்தோரும் இவரைக் கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கின்றார்.சூதாட்டம் தொடர்பாக நல்ல தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பினும் தொலைபேசி அச்சுறுத்தல்களால் அவர்கள் மௌனமாக இருப்பதாக அவர் கூறுகிறார்.

## முதல் டெஸ்ட் போட்டிக்கான மைதானம் மாற்றப்படலாம்!

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியை உத்திரப் பிரதேசத்திலுள்ள கான்பூர் மைதானத்தில் நடத்துவது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுவாரியம் இன்று முடிவு செய்யவுள்ளது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமான முதல் டெஸ்ட் போட்டியை உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரிலுள்ள கிறீன்பார்க் மைதானத்தில் நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்திருந்தது.

இந்நிலையில் அம்மாநிலத்தில் பெய்துவரும் மழை காரணமாக கிறீன்பார்க் மைதானம் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் அங்கு போட்டியை நடத்த முடியாத சூழல் உருவாகியுள்ளது.


## இறுதியாட்டம் இன்று!

வடமராட்சி கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு உடுத்துறை மகாவித்தியாலய அணியும் ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை அணியும் தெரிவாகியுள்ளன.

இன்று புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இது இடம்பெறவுள்ளது.

அதனை அடுத்து வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துக்கும் உடுத்துறை மகாவித்தியாலய தெரிவு அணிக்கும் இடையே சிநேகித பூர்வமான உதைபந்தாட்டமும் இடம் பெறவுள்ளது.

(11)



# சிறிலங்கா கரையோரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

சிறிலங்காவின் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

தென்பதி கரை யோரப்பகுதியிலிருந்து சட்டவிரோதமாக ஆட்கள் கடத்தப்படுவதைத்தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக பொலிசாரும், படையினரும் மேற்கொண்ட நடவடிக்கையினால் 650 ற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் உட்பட எழுநூறு பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்தும் மையமாக சிறிலங்கா விளங்குவதாக ஐரோப்பிய நாடுகள் பல சிறிலங்கா அரசாங்கத்திடம் தொடர்புகொண்டு தெரிவிததுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டிருந்த 13 இந்தியப் பிரசைகளை நீர்கொழும்ப நீதிமன்ற நீதிபதி விடுதலை செய்துள்ளார்.

அத்துடன் இவர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைக்கும்வரை மீரிகம புனர்வாழ்வு முகாமில் தங்கவைக்குமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

இவர்களுக்கு எதிராக குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# இந்தோனேசியா விடுதியொன்றில் குண்டு வெடிப்பு 14பேர் பலி;150க்கு மேற்பட்டோர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாத் தலைநகர் ஜகார்த்தாவில் பிரபல்யமான விடுதி ஒன்றின் வளாவிற்குள் கார்க் குண்டு ஒன்று வெடித்துள்ளது. நேற்று இடம் பெற்ற இந்தக் குண்டு வெடிப்பில் 14க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 150க்கு மேற்பட்டோர்காயம டைந்துள்ளனர்.

இந்தவருடம் ஜகார்த்தாவில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய தாக்குதல் இது என்று தெரிவிக்கப்படுகிறது. 33 மாடிக்கட்டடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் ஒரு தற்கொலைத்தாக்குதல் என்று ஜகார்த்தா ஆளுநர் கூறியுள்ளார்.



குண்டுவெடிப்பால் ஏற்பட்ட தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப்படைவீரர்கள்.

# மக்கள் வங்கி இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

தங்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இயங்கி வரும் கிளிநொச்சி மக்கள் வங்கி எதிர்வரும் 18ம் திகதி முதல் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக் கருகாமையிலுள்ள எம்.எம்.பி கட்டடத்தில் இயங்கவுள்ளது.

அன்றுமுதல் தொலைநகல் தொடர்புகளுடன் உள்ளூர் வெளிநாட்டு காசோலைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென கிளிநொச்சி கிளை மக்கள் வங்கி முகாமையாளர் செ.பாலராஜா தெரிவித்துள்ளார். (சோ)

# ஐவரின் அங்கத்துவம் இடைநிறுத்தம்

தென்மாகாணசபையைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேரது கட்சி அங்கத்துவம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கட்சியின் நிறைவேற்று சபைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஐந்துபேர் அனுமதியில்லாது இந்திய விஜயத்தினை மேற்கொண்டனர். இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள்.

## மக்களுக்கு..

கடந்த காலப் போரால் நீர்ப்பாசனக் குளங்கள் பல பாதிக்கப்பட்டுள்ளன. அவை புனரமைக்கப்பட வேண்டும். இவ் வேலைத்திட்டங்களை உள்ளூர் நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்வதன் மூலம் பயனாளிகளை இனங்கண்டு சரியான முறையில் முன்னேற்ற கரமாக செய்யமுடியும். தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது வட-கிழக்குப் பகுதிகளில் கடந்த போர்க் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பாக சேவை ஆற்றியதால் தமிழ் மக்கள் இந்நிறுவனம் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள் ளார்கள். யுத்த கால இடம்பெயர் வின் போது, நிறுவனம் நீண்ட கால மாக தமிழ் பகுதிகளில்" இயங்கி வருகின்ற சர்வதேச நிறுவனமாகும்.

ஜப்பான் நிறுவனமான தங்களது நிறுவனங்கள் எமது பகுதிகளில் இயங்குகின்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழில் திறனை அதிகரிக்கக்கூடிய வகையில் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கி அவற்றின் தகைமையை கூட்டுவதற்கு உதவி புரிய வேண்டும் என அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் த.பு.கழகம் கடந்த காலங்களில் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்தல், போசாக்கு நிலையை உயர்த்துதல் போன்ற வேலைத்திட்டங்களை சிறப்புறச் செயற்படுத்தியமை தொடர்பாக ஜப்பானியக் குழுவினருக்கு எடுத்துக்கூறிய தங்கன் அவர்கள் இத்தகைய வேலைத்திட்டங்களையும் முன்னெடுப்பதையும் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

காலை 11.40 மணி தொடக்கம் 2.00 மணிவரை இடம்பெற்ற சந்திப்பில் ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்கள் தரப்பில் யூசோ ஓட்டா (இயக்குனர் இடம்பெயர்ந்தோருக்கான மீளக்குடியமர்வு தலைமை அலுவலகம்), கின்சக் ஒக்காவா (வெளிநாட்டு அமைச்சு மனித உரிமைகள் உதவிகள் வழங்கும் பகுதி), கின் ஓமா (இடம்பெயர்ந்தோர் நலன்புரி திட்டமிடல் சம்பந்தப்பட்ட தலைமை அலுவலகம்), இட்சுகோ நேமோடோ (தலைவர், பி.ஏ.ஜே), நேட்டோ மாரியுமா (திட்ட அதிகாரி ஆசிய மருத்துவ அதிகாரிகள் சங்கம்), தோமஸ் இனோயி, சோக்கோ நொகாக்கா (பொது தொடர்புகள் அலுவல்கள் உத்தியோகத்தர்), யூஜி ஒட்சு (சிறிலங்கா நிகழ்ச்சிகள் தொடர்பாளர்), இக்சி சாசேம் (சிறிலங்கா ஜப்பானிய பிரதிநிதி ஜப்பான் பொது அமைப்பு) ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழர்..

ஸ் லோறன்ஸ் கிறிஸ்ரி ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

மேற்படி ஜப்பானிய குழுவினர் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் அப்பணி தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## எமது...

வலியுறுத்தும் அடையாளமாகவே உள்ளது.

வடதமிழீழத்திலும் இவ்வாறான சான்றாதாரங்கள் பெருமளவில் உள்ளன. எமது ஆதாரங்களை அழித்து எமது தாயக மண் எங்களுடையது இல்லை என்பதை நிருபிப்பதற்கான முயற்சிகள் வேறு ஒரு பக்கத்தில் நடைபெறுகின்ற அபாயகரமான நிலையும் உண்டு.

எனவே எமது மக்களுக்கு அரும்பொருட்களை, அடையாளங்களைப் பாதுகாக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துதல் வேண்டும். இதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்கி உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். முன்னைய காலங்களின் சூழ்நிலை இவ்வாறான செயலுக்கு சாதகமாக இருக்கவில்லை. இன்றைய சூழ்நிலை சாதகமாக உள்ளது. எனவே இந்த வேளையைப் பயன்படுத்தி நாம் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.இதுஎமது தலைவர் எதிர் பார்க்கும் பணியாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரும் பொருட்காப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ரமேசப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், வே.பாலகுமாரன், கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் பேராசிரியர்கள் கலாசார உத்தியோகத்தர்கள், காவல்துறை, நிதித் துறை புலிகளின்குரல் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் போராளிகள் ஆர்வலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் தமிழழீழ அரும்பொருட்காப்பு நடுவம்அமைக்க முடிவு செய்யப்பட்டது. அரும்பொருட் காப்பகத்தினுடைய முதன்மையான பணி தற்போது நடைபெற்றுவரும் அரும் பொருட் சூறையாடலை நிறுத்தலாகும்.

இது தொடர்பாக தமிழீழ மண்ணிலிருந்துவேறு இடங்களுக்குக் கொண்டுசெல்வதைத் தடுக்கவோ பறிமுதல் செய்யவோ தமிழீழக் காவல்துறையினரின் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அரும் பொருட்காப்பகம் வேண்டி நிற்கிறது.

- தேர்தல் முறை தொடர்பான பாராளு.குழு -

# தலைமைப் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டமைக்குப் பாராட்டு

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைப்பது பற்றி எதிர்க்கட்சியினர் தமது பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனவை அரசாங்கம் இப்பதவிக்காகப் பிரேரித்தமை மிகவும் அபூர்வமான சந்தர்ப்பம் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

அரசாங்கம் விடுத்த இந்த அழைப்புத் தொடர்பாக நேற்றைய பொ.ஐ.மு. மத்திய குழுக் கூட்டத்தில் பேசிப் பொது இணக்கம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினேஸ் குணவர்த்தனவிற்கு வழங்கப்பட்ட வாய்ப்பை ஏற்று குழுவின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கும் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

தலைமைத்துவம் பொதுசன ஐக்கிய முன்னணிக்குக் கிடைப்பதால் அழுத்தம் கொடுக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், நாட்டின் ஜனநாயகத்திற்காகவும் சுபிட்சத்திற்காகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் கருத்தொற்றுமை தெரிவிப்பதால் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் சனாதிபதி அங்கீகரிப்பதாகவும் அமைச்சர் ஜெயரத்தினா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றக் குழுவின் தலைமைப் பதவி எதிர்க்கட்சிக்குக் கிடைத்தால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் மறைமுகப் பங்களிப்பை பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது என்று லங்காசமசமாஜக் கட்சி கூறுகின்றது. இந்தக் குழுவின் தலைமைத்துவத்துக்கு தினேஸ் குணவர்த்தனா மிகவும் பொருத்தமானவர். அரசாங்கத்தின் யோசனை சிறந்த அரசியல் எதிர்காலத்துக்கு கட்டியம் கூறுவதாக கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

இந்தப் பதவியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைப்பதன் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக எதிர்க்கட்சியினரிடம் ஒப்படைக்கின்றார் என்பது தெரியவருகிறது என்று விக்கிரமபாகு கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

- மாகாண சபை உறுப்பினர் நியமனம் -

# தேர்தல் ஆணையாளர் மீது நீதிமன்றில் விசாரணை!

(கொழும்பு)

ஊவா மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு நியமனம் அளித்தது தொடர்பாக தேர்தல் ஆணையாளரையும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் ஆகஸ்ட் 29ம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு அழைத்திருக்கிறது.

முபாரக் என்பவரின் நியமனம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர், பொ.ஐ.மு.செயலர் தி.மு.ஜெயரத்ன மற்றும் நீதிபதி ஒருவருக்கு எதிராக சேரம் என்பவர் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையே மேற்படி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபடவிருக்கிறது.

மேலும் இது தொடர்பாக தெரியவருவதாவது.

சிறிசேன என்ற உறுப்பினர் இராஜினாமா செய்ததை அடுத்து சமரவீர வீரவன்னி என்பவர் அவ்விடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அவரும் பதவியிலிருந்து நீங்கியதால் அவ் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் முபாரக் நியமிக்கப்பட்டார் என்றும் இவரின் பெயர் வேட்பு மனுவில் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதார் இவரின் நியமனத்தை ரத்துச் செய்யுமாறும் மேன்முறையீட்டு மனு மூலம் கோரியிருக்கிறார்.

# 25 புலனாய்வுத்துறையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

## -அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்பு அரசாங்கத்தின் 25 புலனாய்வுத் துறையினர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் பொதுசன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினரான ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளேயின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவர்கள் 25 பேரில் நான்கு பேர் இராணுவ அதிகாரிகள், எட்டுப்பேர் இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள், 11 பேர் இராணுவத்திற்குத் தகவல் வழங்கும் சிவிலியன்கள், இருவர் பொலிசார் எனத் தெரிவித்த மாரப்பன வடக்குக் கிழக்கிலிருந்த 85 இராணுவ சோதனைச் சாவடிகளில் 56 நீக்கப்பட்டுள்ளன என மேலும் கூறியுள்ளார்.

# பகிரங்க அறிவித்தல்

எனது கட்சிக்காரரான உடுவில் சுன்னாகத்தில் வசிக்கும் அரியரத்தினம் பாலச்சந்திரன் என்பவரது சார்பாக என்னால வெளிப்படுத்துவதாவது:

குறித்தபாலச்சந்திரன் அவர்களால் 1996ஆம் ஆண்டு தை மாதம் 2ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு S.S. முத்துக்குமாரு என்பவரால் 4027 இலக்கத்தில் முடித்த பொது அற்றோனித் தத்துவம் 39/1 கனேசபுரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்பொது அற்றோனித்தத் துவத்தை தற்போது தன்னால் சுயமாக இயங்க முடியும் என்ற காரணத்தைக் காட்டி ரத்துச் செய்யுமாறு வேண்டியதற்கு இணங்க இப்பகிரங்கக் அறிவித்தல் மூலம் இப்போது அற்றோனித்தத்துவம் ரத்து செய்யப்படுகின்றது. ஆகையால் இப்போது அற்றோனித்தத்துவத்தை பயன்படுத்தி அவருக்குச் சொந்தமான காணிகளை உரிமை மாற்றிக் கொடுக்கவோ அல்லது இன்னொருவருக்கு கையளிக்கவோ முடியாது எனவும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

அறிவித்தல்
ச.நல்லநாதன்,
சட்டத்தரணி,
சுன்னாகம்/யாழ்ப்பாணம்.

(3610)

**01-08-2003** தொடக்கம் **08-08-2003** வரை

**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க கொடிவாரம்**

என்னை நான் நேசிப்பதைப் போல், மாற்று வலுவுள்ளோரையும் நேசிப்போம். **(Kared)**

(K.8451)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.